**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. STC 229 of 2019

Depositions of PW -5 witness for ________ Prosecution / Defence / Court

Name : திரு.ராமசாமி

Father's Name : த/பெ.

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th **day of June** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்று ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் வசித்து வருகிறேன். கடந்த 23.07.2018 ஆம் தேதி கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக இருந்த பொழுது இரவு 9:30 மணிக்கு உதவி இயக்குனர், உதவி அமலாக்க அலுவலர் திருமதி.எஸ்.அம்சவேணி அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி கருமத்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 38/2018 சட்டப்பிரிவுகள் 5,10 Handlooms (Reservation of Articles for Production Act) 1985 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சாட்சிகள் அம்சவேணி, துரைராஜ், வின்சென்ட் ஆகியோர்களை

விசாரித்து தனித்தனியாக வாக்கு மூலம் பதிவு செய்தேன். மேலும் சாட்சிகள் கண்ணன் மற்றும் கஸ்தூரி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் எதிரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்திற்கான மாதிரி ஒப்புகை சீட்டு ஒப்புவித்ததை வழக்கிற்காக கைப்பற்றினேன். மாதிரி சீட்டு **அ.சா.ஆ.** 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியை கைது செய்து நிலைய ஜாமீனில் விடுவித்தேன். மேலும் புகார்தாரர் ஆஜர் செய்த கைப்பற்றுதல் மகசர், பஞ்ச நாமா மற்றும் வழக்கு சொத்தை படிவம் 91 மூலமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.சா.ஆ.** 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது . இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது சட்டப் பிரிவின் கீழ் 04.09.2018 தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.புகார் காவல் நிலையம் எழுதிக் கொண்டு வந்தார்கள். புகாரில் எத்தனை மணிக்கு கொடுத்தார்கள் என்று குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். ஆனால் தேதி குறிப்பிடப்பட்டு புகார் அளித்தார். மேற்படி புகாரை நான் பெற்று இரவு 9:30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் பின்னிட்டு சம்பவ இடம் சென்றேன். நான் சென்று மேற்படி சம்பவ இடத்திலிருந்து வழக்கு சொத்தை கைப்பற்றினேனா என்றால் புகார் வழக்கு சொத்தினை கைப்பற்றி நிலையம் அவராக கொண்டு வந்தார். மேற்படி குடோன் எந்த திசையை நோக்கி இருந்தது என்றால் தற்பொழுது எனக்கு ஞாபகம் இல்லை. நான் வழக்கு சொத்தை ஆய்வுக்கு எதுவும் அனுப்பவில்லை. மேற்படி பொதுமக்கள் சாட்சியை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. நாம் சம்பவ இடம் செல்லவில்லை என்றும் புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதற்கு ஏற்றவாறு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness** (**Sd**/- **T**. **Arunkumar**)

**Judicial Magistrate**,

**Sulur**.